**முன்னேற்றமடைந்துவரும் பிராந்தியங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் - 2019**

---

முன்னேற்றமடைந்துவரும் பிராந்தியங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூலை 07 ஆம் திகதிய எஸ்எல்-பி116 எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சாகவிருந்த தற்போதைய அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் 04 மாகாணங்களின் மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களாக உள்ளன. அடிப்படை உட்கட்டமைப்பை முன்னேற்றுவதனூடாக மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல் மற்றும் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 20,622 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 15,410 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 17,185 மில்லியனுக்குச் சமமான ஜப்பான் யென் 12,957 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2017 யூலை 07 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | செயற்திட்ட வழிகாட்டல் குழுக்களின் கூட்டங்கள் 02 மாதங்களிற்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 02 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. | செயற்திட்ட நடவடிக்கைகளை கண்காணித்தல் தொடர்பான பொறிமுறை முறையாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்திட்ட வழிகாட்டல் குழுக்களின் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 756 மற்றும் 757 | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நிலையான சொத்துக்கள் சரிபார்க்கப்பட்டிருக்கவில்லை. | இயன்றளவு விரைவாக பௌதீக மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்படும். | ஆண்டின் இறுதியில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 16 ஆம் பின்னிணைப்பின் பிரகாரம் வட, வட மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் | (அ) பூர்த்திசெய்வதில் தாமதங்கள்<br>(ஆ) கிரய மதிப்பீடுகளின் மிகையான ஓட்டம் | மூன்று கட்டங்களின் கீழ் 2023 செப்தெம்பர் 30 இற்கு முன்னர் | வேலையை துரிதப்படுத்துவதற்கு வேலைத்திட்டம் |

| | | | |
|---|---|---|---|
| கிராமிய வீதிகளின் நிர்மாணம் மற்றும் புனரமைப்பிற்கான 224 உப செயற்திட்டங்கள், நீர்ப்பாசன முறைமைகளின் நிர்மாணம் மற்றும் புனரமைப்பிற்கான 121 உப செயற்திட்டங்கள் மற்றும் நீர் வழங்கல் திட்ட முன்னேற்றத்திற்கான 67 உப செயற்திட்டங்கள் என்பவற்றின் கீழான வேலைகள் செயற்திட்டக் காலப்பகுதியின் போது பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் உரிய வேலைகள் மதியுரையாளர்களின் நியமனத்திலுள்ள தாமதங்கள் காரணமாக 2019 திசெம்பர் 31 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | (இ) குறித்துரைக்கப்பட்ட தரப்பினர்களால் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. | இனங்காணப்பட வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) இரண்டு மதியுரையாளர்கள் 2019 மார்ச் 27 மற்றும் 2019 யூலை 15 இல் தாமதத்துடன் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். எனினும் 412 உப செயற்திட்டங்களிற்குரிய விரிவான வடிவமைப்பு தொடர்பான அறிக்கை மதியுரைச் சேவை உடன்படிக்கைகளின் பிரகாரம் 34 வராங்களினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 யூன் 30 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மதியுரை பணிக்கான இணங்கப்பட்ட பதவியணிக் குழுவிற்கு 2020 யூன் 30 வரை | (அ) பூர்த்திசெய்வதில் தாமதங்கள்<br>(ஆ) கிரய மதிப்பீடுகளின் மிகையான ஓட்டம்<br>(இ) குறித்துரைக்கப்பட்ட தரப்பினர்களால் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய நேரத்தில் நீர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததன் காரணமாக கிழக்கு மாகாணத்தில் எடுத்துச் செல்லக்கூடிய நீரின் வடிவமைப்பு வேலை தாமதமடைந்திருந்தது. வீதி மற்றும் நீர்ப்பாசன கட்டம் I இன் வடிவமைப்பு வேலைகள் 2020 மார்ச் 02 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | உரிய நேரத்தில் வேலையை பூர்த்திசெய்வதற்கு உரிய காலத்தில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் செயற்திட்டம் மதியுரை பணியை துரிதப்படுத்துவதற்கு மதியுரையாளரிற்கு வழிகாட்டலை மேற்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணிப்பொறுப்பு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக மதியுரையாளரிற்கான ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் வேலை ஆரம்பித்தல் முற்பணம் செலுத்தப்பட்ட பின்னர் 14 நாட்களினுள் வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் வட மாகாணத்தில் 85 கிராமிய வீதிகள் மற்றும் 50 நீர்ப்பாசன உப செயற்திட்டங்களிற்கான மதியுரை பணிகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல்களின் 5.4.4(I) ஆம் இலக்க பந்தியில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டல்களிற்கு முரணாக 02 மதியுரை ஒப்பந்தங்கள் மீதான ஏற்பாட்டுத் தொகைகள் மற்றும் நிகழத்தக்கவைகளை உள்ளடக்குவதன் ஊடாக ரூபா 110.16 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக மதியுரை நிறுவனங்களிற்கு ரூபா 11.56 மில்லியன் தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | அரசாங்கத்திற்கு மேலதிக சுமை. | ஜப்பான் ஓடிஏ கடன் (Japanese ODA loan) மதியுரை தொழில்வாய்ப்பு மற்றும் பொருட்கள் சேவைகளின் பெறுகையின் கீழ் பெறுகைக்கான வழிகாட்டல்களில் ஒப்பந்ததாரரின் விசேட நிபந்தனையொன்றான 6.5 தொடர்பாக வேலை ஆரம்பிப்பு முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. | ஏதாவது ஏற்பாட்டுத் தொகைகள் மற்றும் நிகழத்தக்கவைகளை தவிர்த்து ஒப்பந்தப் பெறுமதியில் ஆகக்கூடுதலாக இருபது சதவீதம் வேலை ஆரம்பிப்பு முற்பணங்களாக செலுத்தப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| மதியுரை சேவை உடன்படிக்கை ஒப்பந்தத்தில் நிர்வாக மேந்தலை கிரய கொடுப்பனவிற்கான ஏற்பாடு உள்ளடக்கப்பட்டிருக்காத போதிலும் நிர்வாக மேந்தலை கிரயமாக மதியுரை நிறுவனமொன்றிற்கு ரூபா 1.09 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மதியுரை செலவினம் அதிகரிக்கும். | உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். | ஓடிஏ கடனின் கீழான பெறுகைக்கான வழிகாட்டல்களிற்கிணங்க கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2017 செப்தெம்பர் 08 ஆம் திகதிய டிஎம்எஸ்/டி/7777/ஆர்ஐடிஈபி ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் சிரேஷ்ட பொறியியலாளர் மற்றும் பெறுகை நிபுணர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதில் தாமதங்கள் | இப்பதவிகளிற்காக தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் அறிக்கையிட்டிருக்கவில்லை. ஆகையால் இவ் வெற்றிடப் பதவிகள் செயற்திட்ட பணிப்பாளர் மற்றும் பிரதி செயற்திட்ட பணிப்பாளரால் தாமதமின்றி மேற்கொள்ளப்படுகின்றன. | செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு மற்றும் செயற்திட்ட அமுலாக்கல் பிரிவுகளில் பெறுகை முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாக உத்தியோகத்தரொருவர் காணப்பட வேண்டும். |

**3.5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் பிரகாரம் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு மற்றும் செயற்திட்ட அமுலாக்கல் பிரிவுகளின் பெறுகைக் கணக்காய்விற்குப் பொறுப்பாக உள்ளகக் கணக்காய்வாளர் காணப்பட்ட போதிலும் முன்னைய ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வாளரால் பெறுகைக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் பலவீனங்கள் வெளிப்படுத்தப்படாது. | வருடாந்த செயலாற்றல் மதிப்பீட்டில் உள்ளகக் கணக்காய்வாளரிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளரால் பெறுகைக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |